செ.வெ.எண்.23 நாள்: 07.09.2017

# பத்திரிக்கை செய்தி

திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் உள்ள தாமிரபரணி நதிக்கரையில் தூய்மைப்படுத்தும் பணிகள் மாவட்ட நிர்வாகத்துடன், மாநகராட்சி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள், தொண்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் பங்களிப்புடன் முதற்கட்டமாக ஏற்கனவே தூய்மைப்பணிகள் செய்யப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக, தாமிரபரணி தூய்மைப்படுத்தும் பணிகள் மாவட்ட நிர்வாகம், மாநகராட்சி, தொண்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் 25 கல்லூரிகளைச் சேர்ந்த சுமார் 2000-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்களிப்புடன் 09.09.2017 அன்று நடைபெற திட்டமிடப்பட்டு இருந்தது.

தற்பொழுது நிர்வாக காரணத்தினால், இப்பணிகள் நடைபெறுவது ஒத்தி வைக்கப்படுகிறது. இரண்டாம் கட்ட தூய்மைப்பணிகள் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி